சார்பு நீதிமன்றம், பல்லடம்.

**OS. No. 141/2022**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | : | PW1 |
| பெயர் மற்றும் வயது | : | யுவராஜ் |
| தகப்பனார் பெயர் | : | பழனிசாமி |
| தொழில் | : | |
| கிராமம் | : | கோடங்கிபாளையம் |
| தாலுகா | : | பல்லடம் |
| மாவட்டம் | : | திருப்பூர் மாவட்டம். |

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் நாள் திரு.கே.எஸ்.எஸ்.சிவா, பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை.**

எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ளது எனது கையெழுத்து தான். நான் சொன்ன விவரங்களை கணினியில் பதிவு செய்து அதனை நான் சரிபார்த்து கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக

1, 07.12.2019ம் தேதிய கடன் பத்திரம் அசல் (பதிவு செய்யப்படாத ஆவணம் என்று பிரதிவாதி தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைக்குட்பட்டு) **வா.சா.ஆ.1 ஆகவும்,**

2. 11.06.2022ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2 ஆகவும்,**

3. 11.06.2022ம் தேதிய அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அசல் **வா.சா.ஆ.3 ஆகவும்,**

4. 13.06.2022ம் தேதிய ஆன்லைன் குறிப்பு **வா.சா.ஆ.4 ஆகவும்,**

5. 11.06.2022ம் தேதிய அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அசல் **வா.சா.ஆ.5 ஆகவும்,**

6. 13.06.2022ம் தேதிய ஆன்லைன் குறிப்பு **வா.சா.ஆ.6 ஆகவும்,**

7. 01.12.2019 முதல் 10.12.2019 வரையிலான வங்கி கணக்கு குறிப்பு (வங்கியின் முத்திரை இல்லை என்று தெரிவிக்கப்பட்ட பிரதிவாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு) **வா.சா.ஆ.7 ஆகவும்,**

8. வாதியின் ஆதார் அட்டை ஒப்பிட்ட நகல் **வா.சா.ஆ.8 ஆகவும்,**

எனது தரப்பு சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

(Sd/-)K.S.S.Siva/02.09.2024

சார்பு நீதிபதி, பல்லடம்.